நாள் 25.06.2024.

அசல் வழக்கு எண் 28/2022

வா சா 1 கவிதாமேரி , க/பெ அலெக்ஸ் முத்து ராஜா

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

சாமிக்கண் நாடாரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் யோவான் கோவில்பிள்ளை ஆகும். யோவான் கோவில்பிள்ளையின் தம்பி பெயர் தங்கப்பழம் நாடார் என்றால் சரிதான். தங்கபழம் நாடாருக்கு பரிபூரணத்தாய், அன்னமணி என்று இரண்டு மகள்கள் உண்டு என்றால் சரிதான். பரிபூரணத்தாயின் மகன்தான் மாசிலாமணி என்றால் சரிதான். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 8 ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனது தகப்பனார் சாமிக்கண் நாடாரின் சொத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் ்எனறால் சரிதான். எனது வழக்குரையில் தகப்பனார் அலெக்ஸ் முத்து ராஜா என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். 2 ம் வாதிக்கும் தந்தையின் பெயர் அலெக்ஸ் முத்து ராஜா என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2 ம் வாதிக்கு திருமணம் ஆகவில்லை.